# <u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| திரு.S.ரவிச்சந்திரன் பி.ஏ., | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் |
| ஆணையாளர், | திருநெல்வேலி. |
| நகராட்சி அலுவலகம், | |
| கடையநல்லூர். | |

**ந.க.எண். 45/2020/சி1** **நாள்: .02.2021**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்டம் – கடையநல்லூர் நகராட்சி –அவசரக் கூட்டம் 11.02.2021 அன்று நடைபெற்றது– கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் விவரம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*****

கடையநல்லூர் நகராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் 11.02.2021 அன்று அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பார்வைக்காக இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**இணைப்பு –** தீர்மான நகல்கள்

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

நாடெங்கிலும் கோவிட்–19 கொரோனா தொற்று நோய் பரவிவருவதை தடுக்கும் பொருட்டு அரசால் 01.04.2020 முதல் 31.05.2020 வரை முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட ஊரடங்கு காலங்களில் செயல்படாத குத்தகை இனங்களுக்கு குத்தகை தொகையினை தள்ளுபடி செய்வது தொடர்பாக அரசாணை(D) எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.09.2020ன்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சியில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை செயல்படாத குத்தகை இனங்கள் குறித்த அறிக்கையினை இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.262 நாள்.29.10.2020ன்படி 70 குத்தகை இனங்களுக்கு ரூ.701472/–ஐ தள்ளுபடி செய்வதற்கு அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.8763/2020/ஆர்–2 நாள்.02.02.2021ல் மேற்கண்ட குத்தகை தொகையினை தள்ளுபடி செய்வது தொடர்பாக மென்பொருளில் உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட தீர்மானத்தில் அனுமதிபெறப்பட்ட 70 குத்தகை இனங்களில் வரிசை எண்.66,68 வரிவிதிப்பு எண்.141/201587, தலைமை நீரேற்று நிலையம் மற்றும் வரிவிதிப்பு எண்.141/2013010 அண்ணாமலை பொய்கை ஆகிய இரண்டு இனங்களுக்கு கணிணியில் கேட்புத்தொகை வேறுபாடாக உள்ளது.

| வ. எண் | வ.வி.எண் | குத்தகை இனத்தின் பெயர் | குத்தகைதாரர் பெயர் | நகர்மன்ற அனுமதி பெறப்பட்ட தொகை ரூ. | கணிணியில் உள்ள கேட்புத் தொகை ரூ | வித்தியாசம் ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1. | 141/201587 | தலைமை நீரேற்று நிலையம் | கார்த்தீஸ்வரன் | 5250 | 5513 | 263 |
| 2. | 141/2013010 | அண்ணாமலை பொய்கை மீன்பாசி | சு.மாடசாமி | 2100 | 2205 | 105 |
| | | | | | மொத்தம் | 368 |

மேலும் இவ்வாறு கேட்புத்தொகை வேறுபடுதால் மேற்கண்ட இரண்டு குத்தகை இனங்களுக்குரிய கேட்பினை தள்ளுபடி செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் நகர்மன்றத் தீர்மானம் எண்.262 நாள்.29.10.2020ன்படி 70 குத்தகை இனங்களுக்கு தொகை ரூ.701472/–க்கு மட்டுமே அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே கூடுதலாக உள்ள குத்தகை தொகை ரூ.378/–ஐ சேர்த்து 701472+368=ரூ.701840/–க்குமன்றத்தின் அனுமதியும், இது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் சென்னைக்கு அனுப்பிவைத்து 70 இனங்களுக்கான கேட்புத்தொகை ரூ.701472/– என இருப்பதை ரூ.701840/– என திருத்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.3630/2020/அ3)**

**தீர்மான எண். 384**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

இந்நகராட்சியின் வருவாய் வரத்தக்க குத்தகை இனம் பேரறிஞர் அண்ணா தினசரி சந்தையினை 2018–2021 மார்ச்–31 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு ஏற்று நடத்தி வந்த திரு.கார்த்தீஸ்வரன், த/பெ. ராமசாமி, 16பி, செவல் விளைத் தெரு, முத்துக்கிருஷ்ணாபுரம் என்பவர் 2020–21ம் ஆண்டுக்கான குத்தகை தொகை செலுத்துவது மற்றும் கொரோனா தொற்று நோய் காலங்களில் உள்ள 9 மாதத்திற்கான குத்தகை உரிமத்தினை நீட்டிப்பது தொடர்பாக ஆணையாளர்,

கடையநல்லூர் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்த்து சென்னை, உயர்நீதி மன்ற மதுரைகிளையில் WP(MD)No.339/2021ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கிற்கு ஆஜராகிவாதிட திரு.ராஜராஜன் கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/–(பத்தாயிரம் மட்டும்) வழங்க அங்கீகாரத்திற்காக, மேலும் 2021–24ம் ஆண்டுக்கு குத்தகை தொடர்பாக ஏல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது உள்ளதால் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகை வழங்கியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 126/ 2021/அ3)**

**தீர்மான எண். 385**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனம் பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்திலுள்ள இருசக்கர வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 31.03.2021 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேற்கண்ட குத்தகை இனத்தின் மீது 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ல் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி மேற்கண்ட இனத்திற்கு 02.02.2021 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் தொகை செலுத்திய விபரம் | ஏலக்கேள்வி தொகை ஒரு ஆண்டுக்கு |
|---|---|---|---|
| 1. | V. சண்முகசுந்தரம்<br>த/பெ.வேலு,<br>32E/1A இந்திரா நகர்,<br>புதுக்காலனி,<br>மேலக்கடையநல்லூர் | ரூ.300000/–<br>DD. 467015<br>25.01.2021 | ரூ.288000/– |
| 2. | K.ராஜேஷ்,<br>61/207, சுடலை மாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.300000/–<br>DD. 823389<br>30.01.2021 | ரூ.287000/– |
| 3. | K.M.முகைதீன் பிச்சை<br>த/பெ.முகம்மது இப்ராஹிம்,<br>263/21/1 ரகுமானியாபுரம் 9 வது தெரு,<br>கிருஷ்ணாபுரம். | ரூ.300000/–<br>DD. 64708<br>30.01.2021 | ரூ.290000/– |

மேற்கண்ட கேட்கப்பட்ட வ.எண்.1 முதல் 3 வரைக்கான ஏலக்கேள்விகளில் வ.எண்.3ல் குறிப்பிட்டுள்ள திரு.K.M.முகையதீன் பிச்சை என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.290000/– கூடுதலாக உள்ளது. இத்தொகையானது 2018–19ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.246200/–, 2020–21ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.276728/–, 2019–20ஆண்டின் குத்தகை தொகை ரூ.258510/–யினைவிட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை (246200+276728+258510=776146/3)=ரூ.258715/–ஐ விட ரூ.31285/– கூடுதலாக உள்ளது. எனவே மேற்கண்ட வ.எண்.3ல் கேட்கப்பட்ட திரு.K.M.முகையதீன் பிச்சை என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை அங்கீகரித்து அன்னாருக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு.

**(ந.க.எண். 4959/ 2020/அ3)**

**தீர்மான எண். 386**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனம் மேலக்கடையநல்லூர் பண்பொழி ரோட்டிலுள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 31.03.2021 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேற்கண்ட குத்தகை இனத்தின் மீது 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ல் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி மேற்கண்ட இனத்திற்கு 02.02.2021 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் தொகை செலுத்திய விபரம் | ஏலக்கேள்வி தொகை ஒரு ஆண்டுக்கு |
|---|---|---|---|
| 1. | V. சண்முகசுந்தரம்<br>த/பெ.வேலு,<br>32E/1A இந்திரா நகர், புதுக்காலனி,<br>மேலக்கடையநல்லூர் | ரூ.200000/–<br>DD.No. 823378<br>22.01.2021<br>IB KDNL | ரூ.238000/– |
| 2. | P. மாரியப்பன்<br>34/22 வேதக்கோவில் மேற்கு தெரு,<br>மேலக்கடையநல்லூர். | ரூ.200000/–<br>DD.No. 64703<br>25.01.2021<br>TGB KDNL | ரூ.236000/– |
| 3. | K.ராமச்சந்திரன்,<br>78, கிருஷ்ணன் கோவில் வடக்கு தெரு,<br>மேலக்கடையநல்லூர். | ரூ.200000/–<br>DD.No. 64704<br>25.01.2021<br>TGB KDNL | ரூ.242000/– |
| 4. | T..சங்கர்,<br>23A, வேதக் கோவில் தெற்கு தெரு,<br>மேலக்கடையநல்லூர். | ரூ.200000/–<br>DD.No. 64702<br>25.01.2021<br>TGB KDNL | ரூ.243000/– |
| 5. | K..முத்துக்குமார்,<br>த/பெ.காசி,<br>8A/15 பள்ளிக்கூடத்தெரு<br>புளியங்குடி | ரூ.200000/–<br>DD.No.92443<br>01.02.2021<br>TMB PLY | ரூ.241000/– |

மேற்கண்ட வ.எண்.1 முதல் 5 வரை கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வ.எண்.4ல் கேட்கப்பட்ட திரு.T..சங்கர், என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.243000/– கூடுதலாக உள்ளது. இத்தொகையானது 2018–19ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.200000/–, 2019–20ஆண்டின் குத்தகை தொகை ரூ.210000/–, 2020–21ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.220500/–ஐ விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை (200000+210000+220500=630500/3)=ரூ.210167/–ஐ விட ரூ.32833/– கூடுதலாக உள்ளது. எனவே மேற்கண்ட வ.எண்.4ல் கேட்கப்பட்ட திரு.T..சங்கர், என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை அங்கீகரித்து அன்னாருக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு

(ந.க.எண். 4959/ 2020/அ3)

**தீர்மான எண். 387**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனம் அண்ணாமலை பொய்கை ஊரணியில் மீன்பிடிக்கும் உரிமம் 31.03.2021 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேற்கண்ட குத்தகை இனத்தின் மீது 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ல் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 02.02.2021 அன்று பொது ஏலம் /

ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள்/ ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் தொகை செலுத்திய விபரம் | ஏலக்கேள்வி தொகை ஒரு ஆண்டுக்கு |
|---|---|---|---|
| 1. | R. செண்பகராஜா,<br>98F/1F கரிய மாணிக்க பெருமாள் கோவில் தெரு,<br>மேலக்கடையநல்லூர் | ரூ.15000/–<br>DD.No. 423679<br>30.01.2021<br>TMB KDNL | ரூ.27000/– |
| 2. | சு.மாடசாமி,<br>S/o.சுப்பையா பாண்டி,<br>9C கண்ணார் தெரு,<br>மேலக்கடையநல்லூர். | ரூ.15000/–<br>DD.No. 36809<br>29.01.2021<br>கனரா வங்கி KDNL | ஏலம் கோரவில்லை |
| 3. | N.பாபுராஜ்,<br>S/o.நம்பிராஜன்,<br>24F/4, பள்ளிக்கூடம் தெற்கு தெரு,<br>கிருஷ்ணாபுரம். | ரூ.15000/–<br>DD.No. 633726<br>27.01.2021<br>CUB KDNL | ரூ.16500/– |
| 4. | M.K. இசக்கிபாண்டியன்,<br>S/o.கருப்பன்<br>28/6 Dr. அம்பேத்கார் தெரு,<br>கடையநல்லூர். | ரூ.15000/–<br>DD. 23391<br>30.01.2021<br>IB-KDNL | ரூ.30000/– |
| 5. | சு. கிருஷ்ணசாமி,<br>S/o.சுப்பையா தேவர்<br>61/207 சுடலை மாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம் | ரூ.15000/–<br>DD. 82396<br>30.01.2021<br>IB-KDNL | ரூ.15500/– |
| 6. | K.ராஜேஷ்,<br>S/o.கிருஷ்ணசாமி<br>61/207 சுடலை மாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம் | ரூ.15000/–<br>DD. 823398<br>30.02.2021 | ரூ.32000/–<br>(ஒப்பந்தப்புள்ளி) |

மேற்கண்ட கேட்கப்பட்ட வ.எண்.1 முதல் 5 வரையிலான கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மற்றும் வரிசை எண்.6ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.6ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள திரு.K.ராஜேஷ், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.32000/– கூடுதலாக உள்ளது. இத்தொகையானது 2018–19ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.12000/–, 2019–20ஆண்டின் குத்தகை தொகை ரூ.12600/– மற்றும் 2020–21ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.13230/–ஐ விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை (12000+12600+13230=37830/3)=ரூ.12610/–ஐ விட ரூ.19390/– கூடுதலாக உள்ளது. எனவே வ.எண்.6ல் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள திரு. K.ராஜேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்து அன்னாருக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 4959/ 2020/அ3)

**தீர்மான எண். 388**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனம் தாமரைக்குளத்தில் மீன்பிடிக்கும் உரிமம் 31.03.2021 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேற்கண்ட குத்தகை இனத்தின் மீது 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்வது தொடர்பான ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ல் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 02.02.2021 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் / ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் தொகை செலுத்திய விபரம் | ஏலக்கேள்வி தொகை ஒரு ஆண்டுக்கு |
|---|---|---|---|
| 1. | R. செண்பகராஜா,<br>98F/1F கரிய மாணிக்க பெருமாள் கோவில் தெரு,<br>மேலக்கடையநல்லூர் | ரூ.15000/–<br>DD.<br>30.01.2021<br>TMB KDNL | ரூ.41000/– |
| 2. | சு.மாடசாமி,<br>த/பெ.சுப்பையா பாண்டி,<br>9C கண்ணார் தெரு,<br>மேலக்கடையநல்லூர். | ரூ.15000/–<br>DD. 36810<br>29.01.2021<br>கனரா வங்கி KDNL | ஏலம் கோரவில்லை |
| 3. | N.பாபுராஜ்,<br>த/பெ.நம்பிராஜன்,<br>24F/4, பள்ளிக்கூடம் தெற்கு தெரு,<br>கிருஷ்ணாபுரம். | ரூ.15000/–<br>DD. 633727<br>27.01.2021<br>CUB KDNL | ரூ.38000/– |
| 4. | M.K. இசக்கிபாண்டியன்,<br>த/பெ.கருப்பன்<br>28/6 Dr. அம்பேத்கார் தெரு,<br>கடையநல்லூர். | ரூ.15000/–<br>DD. 823392<br>30.01.2021 | ரூ.41500/– |
| 5. | சு. கிருஷ்ணாசாமி,<br>த/பெ.சுப்பையா தேவர்<br>61/207 சுடலை மாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம் | ரூ.15000/–<br>DD. 823395<br>30.01.2021<br>IOB-KDNL | ரூ.37500/– |
| 6. | K.ராஜேஷ்,<br>த/பெ.கிருஷ்ணாசாமி<br>61/207 சுடலை மாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம் | ரூ.15000/– | ரூ.51111/–<br>(ஒப்பந்தப்புள்ளி) |

மேற்கண்ட வ.எண்.1 முதல் 5 வரையிலான கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மற்றும் வ.எண்.6ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.6ல் திரு.K.ராஜேஷ், என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.51111/– கூடுதலாக உள்ளது. இத்தொகையானது 2018–19ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.28000/–, 2019–20ஆண்டின் குத்தகை தொகை ரூ.29400/– மற்றும் 2020–21ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.30870/–ஐ விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை (28000+29400+30870=88270/3)=ரூ.29423/–ஐ விட ரூ.21688/– கூடுதலாக உள்ளது. எனவே மேற்கண்ட வ.எண்.6ல் ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்ட திரு.K.ராஜேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்து அன்னாருக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 4959/ 2020/அ3)

**தீர்மான எண். 389**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

இந்நகராட்சியின் குத்தகை இனம் விசாலாட்சி ஊரணியில் மீன்பிடிக்கும் உரிமத்திற்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகள் குத்தகைக்கு விட ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ல் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 02.02.2021 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் கேட்கப்பட்ட ஏலக் கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் செலுத்திய விபரம் | ஏலக் கேள்வி தொகை ஒரு ஆண்டுக்கு |
|---|---|---|---|
| 1. | மா.சங்கர்,<br>38E5 வடக்கு விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்.<br>கடையநல்லூர். | ரூ.7000/–<br>DD 064704/<br>29.01.2021<br>TGB KDNR | ரூ.5600/– |
| 2. | மா.அழகு சுந்தரம்,<br>த/பெ.மாரியப்பன்<br>60/24 தெற்கு விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.7000/–<br>DD 064712/<br>29.01.2021 | ரூ.5500/– |

மேற்கண்ட வ.எண்.1 முதல் 2 வரையிலான கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வ.எண்.1ல் கேட்கப்பட்ட திரு.மா.சங்கர் என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.5600/– கூடுதலாக உள்ளது. மேற்கண்ட இனத்திற்கு 2018–19ம் ஆண்டிற்கு 8 தடவைகள் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியும் யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. (19.01.2018, 27.02.2018, 16.03.2018, 23.03.2018, 28.03.2018, 13.04.2018, 11.05.2018, 11.01.2019) இந்நகராட்சிப் பகுதியில் ஏற்பட்ட வறட்சியினால் மேற்கண்ட குளத்தில் தண்ணீர் நிரம்பவில்லை. இதனால் மேற்கண்ட 2018–21ம் ஆண்டு முதல் 2020–21 ஆண்டு வரை குத்தகை ஒப்படைப்பு செய்யப்படவில்லை. எனவே தற்போது உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.மா.சங்கர் என்பவரின் ஏலக்கேள்வியினை அங்கீகரித்து அன்னாருக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.4959/2020/அ3)**

**தீர்மான எண். 390**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனம் அட்டக்குளம் ஊரணியில் மீன்பிடிக்கும் உரிமம் 31.03.2021 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேற்கண்ட குத்தகை இனத்தின் மீது 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்வது தொடர்பான ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ல் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 02.02.2021 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் செலுத்திய விபரம் | ஏலக் கேள்வி தொகை ஒரு ஆண்டுக்கு |
|---|---|---|---|
| 1. | PSM,ஜோதிராமலிங்கம்,<br>த/பெ.PS,முருகையா,<br>99,வடக்கு விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம். | ரூ.8000/–<br>DD.No. 336825<br>25.01.2021<br>KVB KDNR | ரூ.7000/– |
| 2. | சு.புதியராஜ்,<br>98/56 வடக்கு விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்.<br>கடையநல்லூர் | ரூ.8000/–<br>DD.No. 423682<br>01.02.2021<br>TMB KDNR | ரூ.6500/– |
| 3. | K.S.அப்துல்மாலிக்,<br>அரசு ஒப்பந்தகாரர்<br>53/22 அய்யாபுரம் வடக்கு தெரு,<br>கடையநல்லூர் | ரூ.8000/–<br>DD.No.135321<br>01.02.2021<br>IOB KDNR | ரூ.5500/– |

மேற்கண்ட வ.எண்.1 முதல் 3 வரையிலான கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வ.எண்.1ல் குறிப்பிட்டுள்ள திரு.PSM,ஜோதிராமலிங்கம் என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.7000/– கூடுதலாக உள்ளது. இத்தொகையானது 2018–19ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.3100/– 2019–20 ஆண்டின் குத்தகை தொகை ரூ.3255/– மற்றும் 2020–21ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.3418/–ஐ விட

கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகை (3100+3255+3418=9773/3)ரூ.3258/—ஐ விட ரூ.3742/— கூடுதலாக உள்ளது. எனவே மேற்கண்ட வ.எண்.1ல் கேட்கப்பட்ட திரு.PSM,ஜோதிராமலிங்கம் என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியினை அங்கீகரித்து அன்னாருக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை ஒப்படைப்பு உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு.

**(ந.க.எண்.4959/2020/அ3)**

**தீர்மான எண். 391**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனம் புளியம்பட்டி ரயில்வே பீடர் ரோட்டிலுள்ள புளியமரங்களின் மேல் மகசூல் அனுபவிக்கும் உரிமம் 31.03.2021 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேற்கண்ட குத்தகை இனத்தின் மீது ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ன்படி அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக 02.02.2021 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் செலுத்திய விபரம் | ஏலக் கேள்வி தொகை ஒரு ஆண்டுக்கு |
|---|---|---|---|
| 1. | த.காளிராசு,<br>த/பெ. தங்கராசு<br>187A/4,புதுமனைத் தெரு,<br>காசிதர்மம். | ரூ.3000/—<br>DD.No. 336832<br>01.02.2021<br>KVB KDNR | ரூ.5900/— |
| 2. | ரா.முருகையா,<br>த/பெ.ராமையா,<br>77, வடக்கு தெரு,<br>குமந்தாபுரம், கடையநல்லூர் | ரூ.3000/—<br>DD,No.336833<br>01.02.2021 | ரூ.6000/— |

மேற்கண்ட கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வ.எண்.2ல் குறிப்பிட்டுள்ள திரு.ரா.முருகையா என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.6000/— கூடுதலாக உள்ளது. இத்தொகையானது 2018—19ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.5000/— 2019—20 ஆண்டின் குத்தகை தொகை ரூ.5250/—, 2020—21ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.5513/—ஐ விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகை (5000+5250+5513=15763/3)ரூ.5254/—ஐ விட ரூ.746/— கூடுதலாக உள்ளது. எனவே மேற்கண்ட வ.எண்.2ல் குறிப்பிட்டுள்ள திரு.ரா.முருகையா என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியினை அங்கீகரித்து அன்னாருக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு.

**(ந.க.எண்.4959/2020/அ3)**

**தீர்மான எண். 392**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள வடக்கு பக்கம் கடை எண்.1க்கு 01.04.2021 முதல் 31.03.2024 மூன்றாண்டுகளுக்கு குத்தகை விட இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ல் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி மேற்கண்ட கடைக்கு 02.02.2021 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் செலுத்திய விபரம் | ஏலக் கேள்வி தொகை மாத வாடகை ரூ. |
|---|---|---|---|
| 1. | அ.வின்செண்ட்பிலவேந்திரன்<br>த/பெ. அருள்ராஜ்,<br>101, மெயின்ரோடு<br>வல்லம். | ரூ.100000/—<br>DD.No. 458329<br>29.01.2021<br>பேங்க் ஆப் இந்தியா | ரூ.5700/— |

| | | | |
|---|---|---|---|
| 2. | A.மக்தூம்,<br>த/பெ.அப்துல் ரஹ்மான்,<br>16G, சந்தை தெரு,<br>கடையநல்லூர். | ரூ.100000/–<br>DD.No. 64705<br>01.02.2021<br>TGB KDNR | ரூ.7000/– |
| 3. | S.ஜாபர் சாதிக் அலி<br>த/பெ.சிக்கந்தர்<br>52, பேட்டை பள்ளிக்கூடம்<br>தென்வடல் தெரு,<br>கடையநல்லூர் | ரூ.100000/–<br>DD.No.64707<br>29.01.2021<br>TGB KDNR | ரூ.6700/– |
| 4. | பா. கந்தசாமி<br>த/பெ. பாலசுப்பிரமணியன்,<br>138,கோபால கிருஷ்ணசாமி<br>கோவில் தெரு, கிருஷ்ணாபுரம்.<br>கடையநல்லூர். | ரூ.100000/–<br>DD.No. 1663<br>01.02.2021<br>TGB KDNR | ரூ.6800/– |

மேற்கண்ட வரிசை எண்.1 முதல் 4 வரை கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வ.எண்.2ல் கேட்கப்பட்ட திரு. A.மக்தூம் என்பவரின் ஏலக்கேள்வி மாத வாடகை தொகை ரூ.7000/– அதிகமாக உள்ளது. இத்தொகையானது மேற்கண்ட கடைக்கு 2018–19ம் ஆண்டின் மாத வாடகை தொகை ரூ.4200/–ஐ விட ரூ.2800/– கூடுதலாக உள்ளது. எனவே வரிசை எண்.3ல் குறிப்பிட்டுள்ள திரு.A.மக்தூம் என்பவரின் ஏலக்கேள்வியினை அங்கீகரித்து அன்னாருக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.4959/2020/அ3)**

**தீர்மான எண். 393**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள கடை எண்.12க்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ன்படி 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்கண்ட கடைக்கு 02.02.2021 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் செலுத்திய விபரம் | ஏலக் கேள்வி தொகை மாத வாடகை ரூ. |
|---|---|---|---|
| 1. | M.சாகுல் ஹமீது,<br>8,இல்லத்தார் தெற்கு தெரு,<br>கடையநல்லூர். | ரூ.100000/–<br>DD.No. 646587<br>29.01.2021<br>SBI KDNL | ரூ.2400/– |
| 2. | S.அகம்மது காசிம்,<br>10/70A முஸ்லீம் 2 வது தெரு,<br>சங்கரன்கோவில். | ரூ.100000/–<br>DD.No. 646580<br>20.01.2021<br>SBI KDNL | ரூ.2500/– |

மேற்கண்ட கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.2ல் கேட்கப்பட்ட திரு. S.அகம்மது காசிம், என்பவரின் ஏலக்கேள்வி மாத வாடகை தொகை ரூ.2500/– அதிகமாக உள்ளது. இத்தொகை ஏற்கனவே 2018–19ம் ஆண்டிற்கான மாத வாடகை தொகை ரூ.2100/–ஐ விட ரூ.400/– கூடுதலாக உள்ளது. எனவே வரிசை எண்.3ல் கேட்கப்பட்ட திரு.S.அகம்மது காசிம், என்பவரின் ஏலக்கேள்வியினை அங்கீகரித்து அன்னாருக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.4959/2020/அ3)**

**தீர்மான எண். 394**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை ஓரங்களில் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 31.03.2021 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேற்கண்ட குத்தகை இனத்தின் மீது 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ல் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 02.02.2021 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகரி | டெபாசிட் செலுத்திய விபரம் | ஏலக் கேள்வி தொகை ஒரு ஆண்டுக்கு |
|---|---|---|---|
| 1. | திரு.R.கார்த்தீஸ்வரன்,<br>த/பெ. ராமசாமி,<br>16/49, செவல் விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.300000/–<br>DD.No. 36808<br>25.01.2021<br>கனரா வங்கி | ரூ.320000/– |
| 2. | திரு,P.ஆறுமுகச்சாமி<br>த/பெ.பிச்சையா,<br>68B, வடக்கு விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.300000/–<br>DD.No. 646562<br>30.01.2021<br>DD.No. 646560<br>SBI KDNL | ரூ.356100/– |
| 3. | திரு.P.கணேசன்<br>த/பெ.புணமாலை,<br>3/29, மாதாங்கோவில் தெற்கு தெரு,<br>மேலக்கடையநல்லூர்,<br>கடையநல்லூர். | ரூ.200000/–<br>DD.No. 423683<br>01.02.2021<br>ரூ.100000/–<br>DD.No.423684<br>01.02.2021<br>TMB KDNL | ரூ.260000/– |
| 4. | திரு.சு.கிருஷ்ணசாமி,<br>த/பெ.சுப்பையா தேவர்,<br>61/207, சுடலைமாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர் | ரூ.300000/–<br>DD.No. 823394<br>30.01.2021<br>IB KDNL | ரூ.280000/– |
| 5. | திரு.S.K.முத்துக்கிருஷ்ணன்,<br>த/பெ.கிருஷ்ண கோனார்,<br>156, மேற்கு மலம்பாட்டை தெரு,<br>கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | ரூ.300000/–<br>DD.No. 633740, 633741, 633742<br>01.02.2021<br>CUB KDNL | ரூ.356000/– |
| 6. | திரு.M.கருப்பையாதாஸ்,<br>158/65, கற்பகசுந்தர விநாயகர் கோவில் தெரு,<br>கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | ரூ.300000/–<br>DD.No 646566<br>01.02.2021<br>SBI KDNL | ரூ.310000/– |
| 7. | திரு.M.செல்வராம்குமார்,<br>த/பெ.முருகையா,<br>6/91 திருவள்ளுவர் தெரு,<br>செங்கோட்டை, மேலூர் | ரூ.300000/–<br>DD.No 250711<br>25.01.2021<br>SBI KDNL | ரூ.351001/–<br>(ஒப்பந்தப்புள்ளி) |
| 8. | திரு.K.ராஜேஷ்,<br>த/பெ.கிருஷ்ணசாமி<br>61/207 சுடலை மாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.300000/–<br>DD.No 823390<br>30.01.2021<br>IB KDNL | ரூ.355555/–<br>(ஒப்பந்தப்புள்ளி) |

மேற்கண்ட வரிசைஎண்.1 முதல் 6 வரை கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மற்றும் வரிசை எண்.7 முதல் 8 வரையிலான வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் கேட்கப்பட்ட

திரு.பி.ஆறுமுகச்சாமி என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.361000/– கூடுதலாக உள்ளது. இத்தொகையானது 2018–19ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.192000/– 2019–20 ஆண்டின் குத்தகை தொகை ரூ.201600/– மற்றும் 2020–21ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.211680/–ஐ விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகை (192000+201600+211680=605280/3)ரூ.201760/–ஐ விட ரூ.154340/– கூடுதலாக உள்ளது. எனவே வ.எண்.2ல் குறிப்பிட்ட திரு.பி.ஆறுமுகச்சாமி என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியினை அங்கீகரித்து அன்னாருக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.4959/2020/அ3)**

**தீர்மான எண். 395**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனம் அரசு மருத்துவமனைக்கு மேல்புறம் உள்ள ஆடறுப்பு மனையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 31.03.2021 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேற்கண்ட குத்தகை இனத்தின் மீது 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ல் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி மேற்கண்ட இனத்திற்கு 02.02.2021 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்டஏலக்கேள்விகள்/ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் செலுத்திய விபரம் | ஏலக் கேள்வி தொகை ஒரு ஆண்டுக்கு |
|---|---|---|---|
| 1. | திரு. M.K. இசக்கிபாண்டியன்,<br>த/பெ.கருப்பன்<br>28/6 Dr. அம்பேத்கார் தெரு,<br>கடையநல்லூர். | ரூ.200000/–<br><u>DD.No. 823384</u><br>29.01.2021<br>IB-KDNL | ரூ.323000/– |
| 2. | திரு.A.முபாரக் அலி,<br>த/பெ.அப்துல் ரஹ்மான்,<br>85, அய்யாபுரம் நடுத்தெரு,<br>கடையநல்லூர். | ரூ.200000/–<br><u>DD.No. 823393</u><br>30.01.2021<br>IB KDNL | ரூ.316000/– |
| 3. | திரு.S.K.முத்துக்கிருஷ்ணன்,<br>த/பெ.கிருஷ்ண கோனார்,<br>156, மேற்கு மலம்பாட்டை தெரு,<br>கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | ரூ.200000/–<br><u>DD.No. 633743, 633744</u><br>01.02.2021<br>CUB KDNL | ரூ.322000/– |
| 4. | திரு.K.S.அப்துல்மாலிக்,<br>அரசு ஒப்பந்தகாரர்<br>53/22 அய்யாபுரம் வடக்கு தெரு,<br>கடையநல்லூர் | ரூ.200000/–<br><u>DD.No.135320</u><br>01.02.2021<br>IOB KDNR | ரூ.311000/– |

மேற்கண்ட வ.எண்.1 முதல் 4 வரை கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.1ல் கேட்கப்பட்ட வரிசை எண்.1ல் கேட்கப்பட்ட திரு. M.K. இசக்கிபாண்டியன், என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.323000/– கூடுதலாக உள்ளது. இத்தொகையானது 2018–19ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.251000/– 2019–20 ஆண்டின் குத்தகை தொகை ரூ.263550/–, 2020–21ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.276728/–ஐ விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.(251000+263550+276728=791278/3)ரூ.263759/–ஐ விட ரூ.59241/– கூடுதலாக உள்ளது. எனவே வ.எண்.2ல் குறிப்பிட்ட திரு. M.K. இசக்கிபாண்டியன், என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியினை அங்கீகரித்து அன்னாருக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு.

**(ந.க.எண்.4959/2020/அ3)**

**தீர்மான எண். 396**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

கடையநல்லூர் நகராட்சி ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் (IUDM) **2018–19**ன் கீழ் போகநல்லூர் உரக்கிடங்கில் **40**KLD அளவில் கசடு கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் (Faecal Sludge – Treatment Palant) ரூ.**400.00** இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பணிகள் நிறைவடைந்த நிலையில் **12.02.2021** அன்று சோதனை ஒட்டம் முடிவடைந்துவிட்டது. இந்நிலையில் போகநல்லூர் உரக்கிடங்கில் அமைக்கப்பட்ட கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை (FSTP) இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்வதற்கு இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லை என்பதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**26888/2018**/UGSS–**2** நாள்.**05.02.2021**ம் தேதிய கடிதத்தில் கசடு கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தினை (FSTP) Operation and Maintenance **(O&M)** இயக்குவதற்கான வழிக்காட்டுதல் நெறிமுறைகளின்படி மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகளை ஒரு ஆண்டு காலத்திற்கு மேற்க்கொள்வதற்கும் அதற்கான செலவீனத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ) மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

ஆ) போகநல்லூர் உரக்கிடங்கில் **40**KLD அளவில் அமைக்கப்பட்டுள்ள கசடு கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையத்திற்கான பணியாளர்கள் மற்றும் ஊதியம் குறித்த விபரங்கள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**26888/2018**/UGSS–**2** நாள்.**05.02.2021**ன்படி செயல்படுத்தவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 516/ 2021/இ1)**

**தீர்மான எண். 397**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

இந்நகராட்சி அலுவலக பணியாளர்கள் பயன்படுத்தும் கழிப்பறையின் நச்சுத் தொட்டி நிறைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், மேற்படி நச்சுத் தொட்டியை தனியார் வாகனம் மூலம் அப்புறப்படுத்திட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஆணையர் அவர்களின் 10.02.2021ம் தேதி அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் 11.02.2021 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விலைப்புள்ளிகள் விபரம் | 5000 லிட்டர் கொள்ளவு கொண்ட லாரி மூலம் அகற்றுவதற்கு 1 நடைக்கு ரூ. |
|---|---|---|
| 1. | மருது செப்டிக் டேங்க் கிளினிங் | 5000/- |
| 2. | சக்தி செப்டிக் டேங்க் கிளினிங் | 6000/- |
| 3. | குருலெட்சுமி செப்டிக் டேங்க் கிளினிங் | 6500/- |

பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் பணியாளர் நலன் கருதி மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள "மருது செப்டிக் டேங்க கிளினிங்" என்ற ஒப்பந்தக்காரர் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 571/2021/எச்1)**

**தீர்மான எண். 398**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் வார்டு எண்.**01** முதல் **33** வார்டுகளிலும் வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலினை தீவிரப்படுத்தவும் **100%** இலக்கினை அடையும் வகையிலும் ஆட்டோவில் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.**150000/–**க்கும் மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

இந்நகராட்சி வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலினை 100% இலக்கினை அடையும் பொருட்டு, அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஆட்டோவில் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.651/2021/அ1)**

**தீர்மான எண். 399**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் வார்டு எண்.01 முதல் 33 வார்டுகளிலும் இருந்து பெறப்படும் சொத்துவரி பெயர்மாற்றம் செய்யும் போது குடிநீர் இணைப்பு எண்ணும் ஒருங்கிணைந்து பெயர் மாற்றம் செய்யும் வகையில் சேவை கட்டணத்தை ரூ.500/– என திருத்தியமைக்கப்பட்டது விபரம் தினசரி நாளிதழ் மற்றும் அரசிதழில் வெளியிட செலவுத்தொகை ரூ.9996/–க்கான மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.4987/2020/அ1)**

**தீர்மான எண். 400**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

இந்நகராட்சி வார்டு –5 கதவு எண்.35, கிருஷ்ணன் கோவில் வடக்குத்தெருவில் வரிவிதிப்பு எண்.141/005/00002ன் தொழில்வரி செலுத்தி வரும் திரு.அ.ராமசாமி என்பவர் மேற்கண்ட முகவரியில் தொழில் செய்வதை நிறுத்திவிட்டு இந்நகராட்சி வார்டு எண்–5, கதவு எண்.35 கிருஷ்ணன் கோவில் வடக்குத் தெருவில் முகவரி மாற்றம் செய்து தொழில் செய்து வருகிறார். எனவே அன்னார் ஏற்கனவே செலுத்திவரும் தொழில்வரி நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது. ஆகவே வரிவிதிப்பு எண்.141/005/00002ஐ ரத்து செய்து அன்னார் பெயரில் புதியதாக தொழில்வரி நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 1912 /2021/அ2)

**தீர்மான எண். 401**

அனுமதிக்கப்பட்டது.

(ஒம்)S.ரவிச்சந்திரன்,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.